2004 Ontario Budget — Budget de l'Ontario 2004

The Plan For Change — Le plan du changement

Ontario

News Release
Communiqué

உடனடி வெளியீட்டுக்காக
மே 18, 2004

# பொருளாதார வளர்ச்சியின் புதிய தலைமுறைக்கான சுகாதாரமும் கல்வியும் முதன்மை பெற்ற திட்டம்

**விரிவான 4-வருடத் திட்டமானது மக்களது முன்னுரிமைகளில் முதலீடு செய்கின்றது, அரச வருமானங்களை உருவாக்குகின்றது, செலவினங்களைக் குறைக்கின்றது**

**குயீன்ஸ் பார்க்** – சுகாதாரத்திலும் கல்வியிலும் முதலீடு செய்வதற்கெனவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கெனவும், வரவு செலவுத் திட்டத்தை சமநிலைப் படுத்துவதற்கெனவும் மக்கின்ரி அரசாங்கம் தனது விரிவான நான்கு வருடத் திட்டத்தை இன்று அறிவித்துள்ளது. ஒன்ராறியோ மக்களின் விருப்புக்கும் தேவைக்கும் ஏற்ப மாற்றத்தை நிகழ்த்தும்போது, 2004 வரவு செலவுத் திட்டம், ஒன்ராறியோவின் நிதியாண்டுச் சவால்களைக் கையாளும்பொருட்டு, ஒரு பொறுப்பு வாய்ந்த, யதார்த்தமான செயன்முறையை முன்வைக்கின்றது என நிதியமைச்சர் கிறேக் சோர்பெரா குறிப்பிட்டுள்ளார்.

நான்கு வருட பொது நிதியாண்டுத் திட்டம் ஒன்றினை முதற் தடவையாக வடிவமைக்கும் இந்த - வரவு செலவுத் திட்டமானது - முதலீடு, அரச வருமான உருவாக்கம், செலவினக் குறைப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் சமநிலைப்படுத்தப்பட்ட கூட்டு ஒன்றினை முன்வைக்கின்றது.

"சுகாதார பராமரிப்பு அமைப்பினை திருத்தியமைக்க வேண்டிய தேவை பற்றியும், கல்வியில் முதலீடு செய்யவேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் ஒன்ராறியோ மக்கள் எங்களிடம் தெரிவித்திருந்தனர்" என்று தமது முதலாவது வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது சோர்பெரா தெரிவித்தார். "பொருளாதார ஸ்திரத் தன்மைக்கும் வளர்ச்சிக்கும் அடித்தளம் இடக்கூடிய விரிவான, பல்லாண்டுத் திட்டம் ஒன்றின் முக்கியத்துவம் பற்றி அவர்கள் தெரிவித்திருந்தனர்".

இன்றைய வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பிரதான முன்முயற்சிகள் பின்வனவற்றை உள்ளடக்கும்:

**சுகாதார பராமரிப்பைத் திருத்தியமைத்தல்**

- புற்று நோயாளர்களுக்கான குறுகிய காத்திருப்பு நேரம்; ஒன்பது புதிய MRI மற்றும் CT நிலையங்கள், 2005-08 ஆண்டளவில் மேலும் 9,000 கண்படல சத்திர சிகிச்சைகள்; 2007-08 ஆண்டளவில் மேலும் 36,000 அதிக இருதய சிகிச்சை சேவைகள், 2,340 மூட்டு மாற்றீடுகள்;
- இருப்பத்து நான்கு மணிநேர பிரதான பராமரிப்பை வழங்கும் பொருட்டு, அடுத்து வரும் நான்கு ஆண்டுகளுக்கு, ஒன்ராறியோ முழுவதும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார பராமரிப்பு வழங்குவோர் அடங்கிய 150 புதிய குடும்ப சுகாதாரக் குழுக்கள் நிறுவப்படும்;
- 2007-08 ஆண்டளவில் வருடாந்தம் மேலும் 95,700 ஒன்ராறியோ மக்களுக்கு வீட்டுப் பராமரிப்புக்கான அதிகரிப்புக்கள் அவர்களது வீடுகளில் பராமரிப்பு வழங்கும்;
- நீண்ட கால பராமரிப்புக்காக 3,760 புதிய கட்டில்கள், மேலும் 2,000 தாதியர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களை வழங்குவதற்கென இவ்வருடம் மேலதிகமாக ஒரு 406 மில்லியன் டொலர்;
- 2004-05 இல் வைத்தியசாலைகளின் செயற்பாட்டு ஆதரவுக்கென 11.3 பில்லியன் டொலர்;
- ஒன்ராறியோவின் பிரதான பராமரிப்புக்கு ஆதாரமளித்து, புனரமைப்பதற்கென இவ்வருடம் 600 மில்லின் டொலருக்கு மேலாக;

- தற்போது செயற்பட்டு வரும் 54 நிலையங்களில், பிரதான பராமரிப்பு வழங்கலை அதிகரிப்பதற்கென 2004-05 இல் மேலும் ஒரு 14 மில்லியன் டொலரை சமூக சுகாதார நிலையங்கள் பெறும்;
- அனைத்துலக மருத்துவப் பட்டதாரிகளின் வாய்ப்புக்களை இரு மடங்காக்குதல்;
- வைத்தியசாலைகளுக்காகவும் நீண்டகாலப் பராமரிப்பு நிலையங்களுக்காகவும் 12,000 கட்டில் உயர்த்திகளைக் கொள்வனவு செய்தல்;
- தலா ஒரு குழந்தைக்கு 600 டொலருக்கு மேலாக, குடும்பங்கள் மீதப்படுத்தலைச் சாத்தியமாக்கும் வகையில், இவ்வருடம் சிறுவர்களது இலவச நோய்த் தடுப்புத் திட்டத்திற்குள் பொக்குளிப்பான், மூளைக் காய்ச்சல், நிமோனியா ஆகியவற்றை சேர்த்துக்கொள்ளல்;
- SARS மற்றும் West Nile போன்ற தொற்று நோய்களை எதிர்த்துப் போராட, இந்த வருடம் பொது சுகாதாரத் துறைக்கு 273 மில்லியன் டொலரை வழங்குதல்.

"ஒரு வைத்தியரைப் பெறமுடியாத 167,000 வரையிலான ஒன்ராறியோ மக்களுக்கு, பிரதான பராமரிப்பு மீதான எமது முதலீடு, இந்த வருடம் பராமரிப்பை உறுதிசெய்யும்" என சோர்பெரா குறிப்பிட்டார்.

**மாணவர்களுக்கான வெற்றி**

- மாணவர் ஒருவருக்கான நிதி வழங்கலை 1,100 டொலருக்கு மேலாக உயர்த்தும் வகையில், 2007-08 ஆண்டளவில் ஒன்ராறியோ பாடசாலைகள் மீதான அரசாங்க முதலீடு 2.1 பில்லியன் டொலரால் அதிகரிக்கும்;
- ஆரம்ப வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை, வகுப்பொன்றுக்கு 20 பிள்ளைகள் என்றவாறான மட்டுப்படுத்தலுடன், நான்கு வருடங்களில் சிறிய வகுப்புப் பருமன்களை வளர்த்தெடுத்தல்;
- 2007-08 அளவில் வாசிப்பு, எழுத்து, கணித துறைகளில் மாணவர்களது மாகாண தராதரத்தை 50 சதவீத்திலிருந்து 75 சதவீதத்திற்கு இலக்கு அளவீடாக அதிகரித்தல்;
- 2005-06 இல் மேலதிகமாக 1000 அசிரியர்களுக்குப் பயிற்சி வாய்ப்புக்கான நிதி வழங்குதல்;
- புதிய 4,000 எழுத்தறிவு, எண்ணறிவு ஆசிரிய நிபுணர்களைப் பயிற்றுவித்து, மொத்தத் தொகையை 8,000 ஆக்குதல்;
- நல்ல விளைவுகளை உயர்த்த உதவும் குழுக்களின் மேலதிக ஆதரவைப் பெறும் பாடசாலைகளின் எண்ணிக்கையை இரு மடங்கிலும் மேலாக அதிகரித்தல்.

"பகிரங்க கல்வியை எமது திட்டம், மிகச் சிறந்த கல்வியாக்கும். எமது மாணவர்கள் தமது உண்மையான சாதிக்கும் திறனை எய்துவதற்கு இது உதவும் - ஒன்ராறியோ தனது முழுமையான சாதிக்கும் திறனை அடைவதற்கு அதுவே நாங்கள் செய்யக்கூடிய மிக முக்கிமான காரியமாகும்" என அமைச்சர் கூறினார்.

தற்போது நடைமுறையில் உள்ள எரிபொருள் வரியான இரண்டு சதம், பகிரங்க போக்கு வரத்துத்துத் துறைக்குக் கிடைக்கச் செய்வதற்கென அளிக்கப்பட்ட வாக்குறுதியை மூன்று வருடங்களில் சாத்தியமாக்குதல், 2007 அளவில் மாகாண அரசினால் வழங்கப்படும் பகிரங்க சுகாதாரச் செலவுப் பங்களிப்பினை 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதத்திற்கு அதிகரித்தல், நெடுஞ்சாலைகள், இயலுமான வாடகை கொண்ட வீடுகள் மற்றும் குடிநீர்த் தரம் என்பவற்றை முன்னேற்றுதல் என்பன உட்பட, நகர சபைகளுக்கான பல்வேறு முக்கிய முன்முயற்சிகளையும் சோர்பெரா முக்கியத்துவப்படுத்தினார்.

அத்துடன் 2005-06 இல் 38 மில்லியன் டொலராக வளரக்கூடிய, சிறுவர்களின் 2004-05 உளநல சுகாதாரத் திட்டங்களுக்கென மேலதிகமாக 25 மில்லியன் டொலரையும் சோர்பெரா அறிவித்தார். 2004-05 இல் சிறுவர் பராமரிப்பு முதலீட்டின் ஓர் அங்கமாக, மேலும் 4,000 பணவுதவியுடனான சிறுவர் பராமரிப்பு இடங்கள்; 11 வருடங்களில் முதற் தடவையாக, ஒன்ராறியோ ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டம் (ODSP), ஒன்ராறியோ சமூக நல உதவி (OW) ஆகியவற்றைப் பெறுவோரின்

அடிப்படைத் தேவைகள் உதவித் தொகையிலும், அதியுச்ச வதிவிட உதவித் தொகையிலும் மூன்று சதவீத அதிகரிப்பு; அத்துடன் முதியோருக்கான சொத்து வரிக்கொடுப்பனவு 125 டொலரால் அதிகரிக்கப்படும்.

அரசாங்கத்தின் இந்தத் திட்டம், முன்னொருபோதும் நடத்தப்படாத, மிகவிரிவான, வரவுசெலவுத் திட்டத்து முன்னான, ஆலோசனைகளில் பங்குபற்றிய பல்லாயிரக்கணக்கான ஒன்ராறியோ மக்களால் ஊட்டப்பட்டதாகும். முக்கிய பகிரங்க சேவைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, சமநிலைப் படுத்தப்பட்ட ஒரு வரவு செலவுத் திட்டத்தை நோக்கி நகர வேண்டியதன் முக்கியத்தவத்தை இக்கலந்தாலோனைகளில் பங்குபற்றிய ஒன்ராறியோ மக்கள் வலியறுத்தியதாகவும் சோர்பெரா குறிப்பிட்டார்.

“எமது நிதியாண்டு நிலைமைகளை உறுதிநிலைக்குக் கொண்டுவருவதற்கும், சுகாதார பராமரிப்பு மற்றும் கல்வி என்பனவற்றில் முதலீடு செய்வதற்கும் நாம் இரு முக்கிய தெரிவுகளைச் செய்துள்ளோம் - நான்கு வருடங்களில் அரச வருமானங்களை அதிகரிப்பது, வரவு செலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்துவது” என்று சோர்பெரா கூறினார்.

சுகாதார பராமரிப்பை சீரமைப்பதற்குத் தேவைப்படும் மேலதிக அரச வருமானம், ஏற்கனவே ஒரு முன்மொழியப்பட்ட, மக்கள் வருமானத்தை அடிப்படையாக் கொண்ட, ஒன்ராறியோ சுகாதார காப்புறுதியினூடாக வழங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளதாக சோர்பெரா தெரிவித்தார். “ஒன்ராறியோ மக்களை சற்று கூடுதலாக பணம் செலுத்துமாறு நாம் கேட்கும்போது, ஒன்ராறியோ சுகாதார காப்புறுதியிலிருந்து பெறப்படும் அரச வருமானம், எமது நான்கு வருடத் திட்டக் காலத்தின்போது சுகாதார சேவைகளை வழங்குவதற்கென்றே பிரத்தியேகமாக முதலீடு செய்யப்படும்” என நிதியமைச்சர் தெரிவித்தார். “சிகிச்சைக்கான குறுகிய காலக் காத்திருப்பு நேரங்கள், அதிக வைத்தியர்களும் தாதியர்களும், தரமுயர்த்தப்பட்ட வீட்டுப் பராமரிப்பு, நீண்டகாலப் பராமரிப்பு என்பன உட்பட காத்திரமான பெறுபேறுகளை இந்த முதலீடுகள் வளைவிக்கும்”

- 30 -

தொடர்பு கொள்க:
Ministry of Finance Information Centre
1-800-263-7965 Toll-Free (Canada/U.S.)